J. R. T. S.] GENERAL SERIES. [No. 24.

# GOOD COUNSEL.

[A practical address to such as know the truth, showing—1st, that every man who walks in a sinful way is in danger of falling into hell—2ndly, seeing this danger of falling into hell, he should seek a way of escape—3dly, seeing the way of escape from hell, he should walk in it through all difficulties, concluding with an exhortation to leave sin, and to seek for forgiveness and salvation thro' Christ.]

# நல்லறிவு.

எவர்களும் ஆத்தும இரட்சணியத்தைத் தேட
வேண்டுமென்பதைச் சொல்லியது.

பிரியமானவர்களே, நாமெல்லாரும் அழிவு
ள்ள சரீரத்தையும் அழிவற்ற ஆத்துமாவையுங்
பொருந்தி இருக்கிறோமென்பதற்கும் நமது
சரீரம் அழிந்தும் ஆத்துமா அழிவற்றதாகி இ
ம்மையிற் செய்த நல்வினை தீவினைக்குத்தக்க
தாய் மறுமையிலே இன்பத்தையெங்கிலுந்
துன்பத்தையெங்கிலும் அனுபவிக்குமென்ப
தற்கும் அறிவாளிகள் உடன்படுவார்கள். பரா
பரன் அருளிய சத்தியவேதத்திலும் மனிதர் எ
ல்லாரும் பாவிகளென்றும் அதினால் அவர்கள்
மரணமடைந்தபின்பு நித்திய உபத்திரவத்தை
அடைய ஏதுவாய் இருக்கிறார்களென்றும் ப
ராபரன் பரிசுத்தரும் நீதியுமுள்ளவர் ஆகை
யாற் பாவிகளை வெறுத்துத் தள்ளுவாரென்
றும் யாவராகிலும் பாவநிவிர்த்தி அடையாதி
ருந்தாற் பசாசுடனே நரகத்திற் றள்ளுண்டவ

3rd Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5,000
1844.

ர்களாய்ப் போவார்களென்றும் அறிவிக்கப்
பட்டிருக்கின்றது.

மேலும் நாம் இறந்தபின்பு மனம் புத்திசித்த
முடைய ஆத்துமா மறுபடியுஞ் சரீரத்தோ
டே சேர்ந்து நித்திய காலமும் இன்பத்தை அ
ல்லது துன்பத்தை அடையுமென்று அந்த வே
தத்திலே சொல்லி இருக்கிறதினாலே அந்த ஆ
த்துமாத் திரும்பப் பூமியிலே பிறக்குமென்
றும் உத்தரிக்கிறதலத்துக்குப் போகுமென்
றும் அது பூலோகத்திலே செய்தவைகளை ம
றந்திருக்குமென்றும் எண்ண நியாயங் காணா
து. ஆதலால் அநித்தியமான இவ்வுலகத்தை
விட்டு நித்தியமான இடத்துக்குப் போகவே
ண்டிய நாமும் ஓரிடத்திலிருந்து வேறோரிட
த்துக்குக்குப் பிரயாணப்படுகிறவர்கள் தாங்
கள் போகிறவிடத்திலே சுகத்தை அனுபவிப்
பதற்கு ஏற்றவைகளைத் தேடுவதுபோல மறு
மையிலே சுகத்தை அனுபவிப்பதற்கு ஏற்ற
முயற்சி பண்ணவேண்டியது. இவ்வுலகப்
பொருள் தோன்றியும் தோன்றாத மாயை
யாயும் இடையிலே நம்மை விட்டு நீங்குகிற
தாயுமிருக்கின்றது. அதை நினையாமல் யா
தொருவன் இவ்வுலகத்திலே மேலான கல்வியை
க்கற்றுப் பாக்கியத்தைப் பெற்று இராச்சிய
ங்களை ஆண்டு மிகவுங் கனம்பொருந்தி இருந்
தாலும் இறந்தபின் உக்கிரமான அக்கினி பற்
றி எரியும் நரகத்திலே தள்ளுண்டால் அவனு
க்கு வருமிலாபம் ஒன்றுமில்லையே. ஆனதால்,

௧-வது. பாவவழியிலே நடக்கிறவன் எவனும்
நரகத்துக்கு ஏதுவாயிருக்கிறானென்பதையும்,

இரண்டாவது. நரகத்துக்குத் தப்பி மோட்சஞ் சேர வழியேதென்று தேடவேண்டுமென்பதையும்,

மூன்றாவது. நரகத்துக்குத் தப்பி மோட்சஞ் சேர வழியைக் கண்டால் என்ன தடை வந்தாலும் அந்த வழியிலே நடக்கவேண்டுமென்பதையும் அறியும்படி வெவ்வேறாக எடுத்துச் சொல்லுவோம்—கேட்பீர்களாக.

க. பாவ வழியிலே நடக்கிறவன் எவனும் நரகத்துக்கு ஏதுவாயிருக்கிறானென்பது.

பாவஞ் செய்கிறவர்கள் நரகத்திலும் புண்ணியஞ் செய்கிறவர்கள் மோட்சத்திலுஞ் சேருவார்களென்று சிவசமயத்தார் சொல்லுகிறார்கள். ஆனாற் கருத்தாவை நேசியாத மனிதர் தங்கள் கீர்த்திக்காகத் தருமங்களைச் செய்கிறார்களென்றும் அவ்வித தருமங்கள் அவர்களை மோட்சத்துக்குப் பக்குவமாக்க மாட்டாதென்றும் மனிதர் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு அதை வெறுத்துவிட்டுக் குணப்பட்டுக் கிறிஸ்துநாதரை விசுவாசித்தவர்களையன்றி மற்றவர்கள் பாவநிவிர்த்தி அடைய மாட்டார்களென்றுஞ் சத்திய வேதஞ் சொல்லுகின்றது. தங்கள் தருமமுதலான செய்கைகளினாலே பாவத்தினால் வரும் ஆக்கினைக்குத் தப்பி மோட்சஞ் சேருவோமென்றிருக்கிறவர்களுடைய முடிவு எப்படி வருமென்றால், திருடனுங் கொலைபாதகனுமான ஒருவனைப் பிடித்து இராசாவுக்கு முன்பாகக் கொண்டு வரும்பொழுது அவன் அவரைப் பார்த்து ஆண்டவரே, நான் கொலை செய்ததும் திருடினது

ம் மெய்தான். அதைத் திரும்ப அவனுடைய
பெண்டாட்டிக்கும் பிள்ளைகளுக்குங் கொடுத்
துவிடுகிறேன். இனி ஒருபொழுதுங் குற்றஞ்
செய்யேன். என் குற்றத்தைப் பொறுத்து
க் கொள்ளுமென்றாலும் அவர் அவனுக்குப்
பொறுத்துவிடாமல் நீ களவெடுத்த பணத்
தைக் கொடுத்துத் தீர்த்தாலும் உன் குற்றம்
நீங்காது. அதற்குத்தக்க ஆக்கினைப்படவே
ண்டுமென்று சொல்லுவார். அதுபோல நா
மும் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டுக் க
ருத்தாவை நோக்கி ஆண்டவரே, இனியொரு
பொழுதும் பாவஞ் செய்யோம். வறியவர்
களுக்கு அன்ன வஸ்திர முதலானவைகளைக்
கொடுப்போமென்று மன்றாடினாலும் அவர்
நமது பாவங்களை நீக்கார். பாவமுள்ளவர்க
ளுக்கு ஆக்கினை செய்யாமல் மன்னித்தாரே
எனில் அவருடைய நீதி வழுவிப்போம். அப்
பொழுது உலகத்தை ஆண்டுநடத்தக்கூடியத
ல்ல. சத்தியத்தை அநியாயத்தினாலே தடுக்கி
ற மனிதனுடைய சகல அவபத்தியின் மேலும்
அநியாயத்தின் மேலும் பராபரனுடைய கோ
பம் வருமென்று வேதத்திலே சொல்லப்பட்
டிருக்கின்றது. இந்த வாக்கியத்தினாலே எவ்
விதமான பாவங்களைச் செய்தவர்களும் பரா
பரனுடைய நீதித்தீர்ப்புக்கு எதிராயிருக்கி
றார்களென்று காணலாம். ஒருவன் எப்பொ
ழுதும் நியாயத்தலத்துக்கு முன்பாக மெய்
சொல்லி வந்தாலும் ஒருமுறைமாத்திரம் பொ
ய் சொன்னால் அதற்காக ஆக்கினைப்பட வேண்
டியிருக்கும். அதுபோலப் பாவமுள்ளவனை

வனுந் தான்தான் செய்த ஒவ்வொரு பாவத்து
க்காகவும் நீதியின்படி ஆக்கினைக்கு ஏதுவாயி
ருக்கிறான். அல்லாமலும் நியாயப்பிரமாண
ப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளை எல்லா
ஞ் செய்யும்படியாய் உறுதிகொண்டிராதவன்
சபிக்கப்பட்டவனாயிருக்கிறானென்றும் பராப
ரன் பரிசுத்தராயிருக்கிறதினாலே பாவிகள் ந
ம்முடைய சன்னிதானத்திலே வரவொட்டாம
ல் அவர்கள் தப்பிதங்களின் நிமித்தம் அவர்கள்
மேல் எரிகிற அக்கினிக் கொழுந்து போல இ
ருக்கிறாரென்றுங் கொலைபாதகருக்கும் வேசிக்
கள்வருக்கும் சூனியக்காரருக்கும பொய்யர்
அனைவருக்கும் இரண்டாம் மரணமாகிய அக்
கினியுங் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கிருக்கு
மென்றும் வேதத்திற் சொல்லியிருக்கின்றது.
பிரியமானவர்களே, அநேகர் தங்கள் பரம
பிதாவுக்கு அமையாத பிள்ளைகளாய் அவரா
லே வரும் ஆசீர்வாதத்தை இழந்து அவருடை
ய கோபத்துக்கு ஏதுவாய்த் தங்கள் நாவரட்
சியை நீக்கிக்கொள்ளும்படி ஒரு துள்ளி தண்
ணீருங் கிடையாதிருக்கும் நரகச் சுவாலையிலே
கிடந்து அழுந்துவார்களென்பதை நினைக்கும்
பொழுது எவ்வளவு திகிலடைய வேண்டுவதா
யிருக்கின்றது. இப்படிப் பரிதாபப்படத்த
க்க வேதனைக்கேதுவாயிருந்துந் தங்கள் மோ
சத்தை உணராமல் நரகத்தை ஆர் கண்டது?
மோட்சத்தை ஆர் கண்டது? நரகத்திலே வி
ழுந்தாற் றூங்கக்கூடாதா? என்று சொல்லிச் சி
ரித்துப் பரிகாசம்பண்ணிக்கொண்டிருக்கிறவ
ர்கள் தாங்கள் மரணமடைந்த பின் இவைகளை

யெல்லாங் காண்பார்கள். அழிந்து போகிற
சரீரத்துக்காக உழைத்துத் தின்று குடித்து
உடுத்துப் பணத்தையுஞ் சந்ததையையும் அதி
கமாக விரும்பி உலகவாழ்விலே மனதை வை
த்து அவைகளையே தேடிக்கொண்டு அழியா
த ஆத்துமாவுக்காக மோட்ச வாழ்வைத் தே
டாதிருப்பது முத்தைப்பார்க்கச் சிப்பி நல்ல
தென்று பத்திரப்படுத்தி வைத்துக்கொள்வது
போலவுந் தனது வீட்டிலே நெருப்பைக் கொ
ழுத்திக் குளிர்காய நல்ல நெருப்பென்று சந்
தோஷிப்பதுவது போலவு மிருக்கின்றது. அ
ய்யோ! நீங்களுங்கள் அறிவென்னுங் கண்ணைத்
திறந்து அக்கினி நிறைந்தெரியும் பாதாளத்தி
ன் மேலாக ஒரு சின்னக் கம்பியிலே நடப்ப
வன் அந்தப் பாதாளத்திலே விழ எதுவாயிரு
ப்பதுபோல நீங்களும் நரக நெருப்பிலே வி
ழ எதுவாயிருக்கிறீர்களென்று பாருங்கள். அ
ல்லாமலும் மறுமையிலே இம்மையிற் காரிய
ங்களை மறந்து போவோமென்றும் ஆக்கினை
இலேசாயிருக்குமென்றும் எண்ணிக் கொள்
ளாதையுங்கள். கொலை பாதகஞ் செய்த ஒரு
வன் அதற்காகத் தான் ஆக்கினைப்படும் நாளி
லே தன் கொலைபாதகத்தை நினைத்துத் துய
ரப் படுவதுபோல நீங்களும் இவ்வுலகத்திற்
செய்த பாவங்களுக்காக நரகத்திற் போய் ஆ
க்கினைப்படுகையில் அவைகளை நினைத்துத் து
யரப்படுவீர்கள். நான் விழமாட்டேனென்று
நினைத்து ஆழமான கிணற்றருகே கண்ணை
மூடி நடக்கிறவர்கள் போல உங்களைத்தானே
மோசம் போக்காமல் நீங்கள் தருமத்தினாலே

மோட்சத்துக்குச் சேருவோமென்கிற வீண் நம்பிக்கையை விட்டு உங்கள் அறிவென்னுங் கண்ணைத் திறந்து உங்கள் மோசத்தைக் கண்டு விலகி அவதானமாய் நடப்பீர்களாக.

உ. நரகத்திலே விழ ஏதுவாய் இருக்கிறேனென்று காண்கிற ஒவ்வொருவனுந் தான்தான் அதற்குத் தப்பிக்கொள்ள வகை பார்க்க வேண்டுமென்பது.

மனிதர் பாவிகள் தாமென்று அநேகர் ஒத்துக்கொண்டாலும் பாவம் எப்படி வந்ததென்று விசாரிக்கிறதேயன்றி அது தீருவதெப்படி என்று ஆராய்கிறதில்லை. கிணற்றிலே விழுந்தவன் அதில் விழுந்த முகாந்திர மென்னவென்று ஆராயாமல் அதிலிருந்து எப்படி ஏறுவேனென்று வகை பார்க்கிறதுபோலவும் ஒரு வீட்டிலே நெருப்புப்பற்றி எரியும்பொழுது நெருப்புப்பற்றவந்த தெப்படியென்று ஆராயாமல் அதைத் தணிக்க வகை தேடுவது போலவும் பாவம் வந்த காரணத்தை ஆராய்ந்து பார்ப்பதைப் பார்க்க அது நம்மை விட்டகன்று போகும் வழி ஏதென்று தேடுவதே பிரதான காரியமாயிருக்கின்றது.

சிலரோ அப்படிச் செய்யாமல் தாங்கள் பாவிகளென்று ஒத்துக்கொண்டுந் தங்களுக்கு வரும் மோசத்தை அறியாமல் மற்றவர்களைப் பார்க்க நான் பெரும்பாவி அல்ல நான் மாத்திரம் நரகத்திற் போவேனோ? இன்னும் அநேகர் அதிலே சேருவார்களென்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அறிய வேண்டுவது. நரகத்திலே அநேகர் போனதினு

ல் அங்கேயுள்ள உபத்திரவங் குறையாது. நெருப்பிலே விறகு கூடக்கூட அனல் சுவாலிப்பதுபோலவும் பொல்லாதவர்கள் கூடக்கூடச் சண்டை மூளுவது போலவும் நரகத்திலே எவ்வளவு அதிகம் பேர் கூடுவார்களோ அவ்வளவுக்கு அதிக உபாதியுமுண்டு.

வேறு சிலர் நரகத்திலே யிருந்த உபாதியுண்டென்பது மெய்தான். நாங்கள் அதற்குத் தப்பிக்கொள்ள விரும்பினாலும் எங்கள் தலையிலே அப்படி எழுதியிருக்கையில் எங்களால் என்ன செய்யக் கூடும்? எங்கள் தலையிலெழுத்துப்போலத்தானே நடக்கும். பின்னை நாங்கள் அதை விலக்கக்கூடுமோ என்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அறியவேண்டியது. இயாதொரு வியாதி வரும்பொழுது இது எங்கள் தலையில் விதிப்படி வந்ததென்று மருந்து செய்யாமல் விட்டுவிடுகிறதோ? அல்லது குறைவில்லாத விளைவுண்டாமென்று விதித்திருக்கையில் நாம் விரைத்தாலென்ன விரையாதிருந்தாலென்ன என்று விட்டுவிடுகிறதோ? விடமாட்டார்களே; தலையில் விதிப்பிரகாரம் நடக்குமென்று ஒன்றையுஞ் செய்யாதுவிட்டு விடாமற் தங்கள் பிரியத்தின்படி நன்மையை அல்லது தீமையைச் செய்து வருகிறதினால் இது காரியத்திலே வீண் போக்குச் சொல்லுகிறார்களென்று அவர்கள் மனந்தானே சாட்சி கொடுக்கும்.

மேலும் நரகமும் மோட்சமும் யாவருக்கும் முன்னே நிற்கையால் ஆருஞ் சொல்ல முடியாத நரக வேதனையையும் எண்ண முடியாத

மோட்ச பாக்கியத்தையுந் தன் மனதிலே சந்
தோஷமுங் கண்டுணர்ந்து நரகத்துக்குத் தப்பி
மோட்சஞ் சேர என்ன செய்வேனென்று நி
னைத்து அழியாத மோட்ச பாக்கியத்தைக்
கொடுக்க வல்லவரைப் பற்றிக்கொள்ள வகை
பார்க்கவேண்டியது. தீருதற்கு அரிதான வி
யாதிகொண்டு சாக ஏதுவாயிருக்கிற ஒருவனு
டனே ஆடையாபரணம் முதலான உலக காரி
யங்களை எடுத்துப் பேசினால் அவன் நான் இ
வைகளை எல்லாம் விரும்பித் தேடின காலம்
போயிற்றே. இப்பொழுது என்னாலே உண்
ண உடுக்கக் குடிக்கக் களிக்க இயலாதே நான்
சுகமாக வழியென்ன! நீ என்னைச் சுகமாக்கு
வாயேயெனில் நான் என்னாஸ்தியெல்லாம் உ
னக்குக் கொடுத்து விடுவேனென்பது போல
ஒருவன் தான் பாவமென்னும் வியாதி கொண்
டு நரகத்துக்கு ஏதுவாயிருப்பதைக் கண்டால்
அதற்கு நீங்குவதெப்படியென்று அறிய விரு
ம்பி மிகுந்த துக்கத்துடனே கண்ணீர் சொ
ரிய அழுது அய்யோ! இரட்சிக்கப்பட என்
ன செய்வேன்? என்று உலக காரியங்களிலே த
ன் மனதைச் செலுத்தாமல் நித்திய நரக அக்
கினியிலே என்றென்றைக்கும் இருக்கக் கூடிய
தெப்படி? இதற்கு நான் தப்பிக்கொள்ள என
க்கு இரக்கஞ் செய்வதாரென்று துயரத்துட
னே பரம காரியங்களைத் தேடுவான். அப்ப
டித் தேடுகிறவர்களுக்கு இரக்கஞ் செய்யப்
பரமண்டலத்திலே இருந்து பூமியிலே மனி
தனாகப் பிறந்து பாவிகளாகிய நம்மிடத்துக்கு
நின்று நம்மேல் வரவேண்டிய ஆக்கினையைச்

சுமந்து நமது பாவங்களுக்காகத் தம்மைப்பலியிட்டு நமக்கும் நீதமுள்ள பராபரனுக்கும் நடுவராக நின்ற கிறிஸ்துநாதரைப் பற்றும் விசுவாசமே மோட்சஞ் சேருவதற்கான வழியென்று அறிந்து கொள்ளலாம்.

௩. நரகத்துக்குத் தப்பி மோட்சஞ் சேர வழியைக் காண்கிறவன் என்ன தடை வந்தாலும் அந்த வழியிலே நடக்க வேண்டுமென்பது.

ஒருவன் தன் நிஜபரம் மோசமென்றும் அதற்கு விலகி ஓட வழியேதென்றுங் கண்டானேயாகில் ஒரு புலியானது தன்னைத் தொடரக் கண்டு பயந்தோடுகிறவன் வழியிலே முள்ளுங் கல்லும் எவ்வளவாயிருந்தாலும் அவைகளை எல்லாம் பாராமல் ஓரோட்டமாய் ஓடுவது போலவும் எரிகிற வீட்டிலிருப்பவன் அதிலிருந்து தப்பிக்கொள்ளச் சீக்கிரமாய் ஓடுவது போலவும் ஓடுவான். அவனுக்கெதிரே அநேகர் நின்று தடுத்துப் புத்திகளைச் சொல்லுஞ் சிநேகிதர் தள்ளினாலும் அவர்களுக்குப் பயந்து கிறிஸ்துவண்டை சேராமல் விட்டுவிடமாட்டான். நீங்களும் பசாசு உங்களை இழுத்துக்கொண்டு போய் நரகத்திற் றள்ளிவிட எப்பொழுதுந் தொடர்ந்துகொண்டு திரிகிறதினாற் சற்றுந் தாமதப்படாமற் கிறிஸ்துவண்டை அடைக்கலமாய் ஓடுவீர்களாக. அவர் பசாசின் கிரியையை அழிக்க வந்தவர். ஆதலால் அவரே அதின் பொல்லாங்குக்கு நீங்கலாக்கி உங்களை இரட்சிப்பவர். அவர் குறித்த வழியிலே சேராதபடி உங்களைத் தடுக்கிறவர்களுக்குப் பயந்து உங்கள் சரீரத்தைத் தாபரிக்க

வும் அழிக்கவுமே அன்றி உங்கள் ஆத்துமா வைக் காக்கவென்கிலும் அழிக்க வென்கிலும் கூடாதவர்களான மனிதருக்குப் பயப்படா தையுங்கள். ஆத்துமாவையுஞ் சரீரத்தையுங் கூட நரகத்திற் போட வல்லவராகிய பராபர னுக்கே பயப்படுங்கள். இம்மையிலே உங்கள் சிநேகிதரும் அயலவர்களும் உங்களைப் பார்த் து நிந்தை பண்ணும்பொழுது அதைத் தாங் கிக்கொள்ளக் கூடாதென்று சொல்லிக் கிறிஸ் துநாதரைப் பின்பற்றுமல் விட்டுவிட்டால் ம றுமையிலே உங்களுக்கு வரும் நரக வேதனை யையெப்படித் தாங்கிக்கொள்வீர்கள்? இப்பொ ழுது கொஞ்சக்காலம் வரும் உபத்திரவத்தை த் தாங்கிக்கொள்ளக்கூடாத நீங்கள் பின்பு நித் தியமும் பசாசிஞல் வரும் உபத்திரவத்தைத் தாங்கிக்கொள்வதெப்படி? இம்மையிலே நீங் கள் விருப்புறு சிற்றின்பத்தை உங்களாத்தும நன்மைக்காக வெறுத்துவிடாதேபோனல் ம றுமையிலே பேரின்பத்தை இழந்து நரகவே தனையல்லோ படவேண்டிவரும். இச்சிவியங் குறுகினதாயும் வருஞ்சீவியம நீடித்ததாயும் இங்கேயுள்ள சுகதுக்கம் அற்பமாயும் அங்கே யுள்ள சுகதுக்கம் பெரிதாயுமிருக்கையால் இவ் வுலக செல்வத்தைப் பொருளென்றும் நிலையெ ன்றும் எண்ணுதுநடப்பீர்களாக. ஐயோ! ந ரகம் எவ்வளவு பரதபிக்கப்படத்தக்க வேதனை யுள்ள இடம்! அதிலே தள்ளுண்டவர்கள் நித் தியகாலமாக நீங்காத வேதனையை அனுபவிக் கவேண்டுமே. அந்தக்காலஞ்சென்றலும் அ ங்கே இருக்கும் வேதனைக்கு ஒரு முடிவில்லை

யே. ஒருதன் வேதனைப்படும்பொழுது அதற்கொரு எல்லையுண்டென்று அறிந்தால் அவனுக்கு சற்றுகுதல் ஆறுதலுண்டு. நரகத்திலே வரும் ஆக்கினைக்கு யாதொரு எல்லை இல்லாததினாலே அங்கே கிடந்தழுந்துகிறவர்களுக்கு ஒருபொழுதும் இதைவிட்டு நீங்கமாட்டோமேயென்கிற நினைவினாலே சற்றுகுதல் ஆறுதலில்லை. இதை நினைத்து நீங்கள் அக்கினியுங் கந்தகமும் உக்கிரமாய்ப் பற்றியெரிகிற நரகபாதாளத்திலே விழுந்துபோகாதபடிக்கு அதைவிட்டுத் திரும்புவீர்களாக.

௧. உங்கள் பாவத்தை வெறுத்துத் தள்ளிவிடுங்கள். பாவத்தினாலே கேடுவருகிறதென்றும் அந்தப் பாவத்தின் பலன் மரணமென்றும் அறிந்து விரியன்பாம்பை மடியிலே வைத்து விளையாடாமல் அதற்குப் பயந்தோடுவதுபோலப் பாவத்துக்கு இடங்கொடாமல் விலகி ஓடுங்கள். ஒருகப்பலிலே ஒரு சின்னத் துவாரமிருக்கில் அந்தக் கப்பல் முழுதையும் அமிழ்ந்தப்பண்ண அது காரணமாயிருக்கும். அதுபோல ஒவ்வொரு அற்ப பாவமும் ஆத்துமாவை நரகத்திற் தள்ளக் காரணமாயிருக்கையால் இயாதொரு பாவத்துக்கும் இடங் கொடாதையுங்கள். பாவஞ்செய்வது இப்பொழுதுபிரியமாயிருந்தாலும் அதினாற்றானே பின்பு நரகவேதனைவரும். அது வாயிலே அமுதமும் வயித்திலே நஞ்சுமாயிருக்குமென்று நினைத்து நஞ்சைத் தின்கிறதற்குப் பயப்படுவதுபோல ஆத்துமாவுக்கு நஞ்சாகிய பாவத்தைச்செய்யப் பயப்படுவீர்களாக.

உ. தேவ அநுக்கிரகத்தைத் தேடுங்கள். நீங்கள் உங்களைச் சீர்திருத்தவும் நற்கிரியையைச் செய்யவுங் கூடாதிருந்தாலும் பராபரன் உங்களைச் சீர்திருத்தச் சித்தமுள்ளவராய் இருக்கையால் அவர் தமது பரிசுத்தாவியை உங்களுக்கு ஈந்தருளும்படி வேண்டிக்கொள்ளுங்கள். அப்படி நீங்கள் தாழ்மையும் வணக்கமுமாய் அவருடைய உதவியைத் தேடினீர்களேயாகில் அவர் உங்களுக்கு உதவிசெய்து உங்கள் மன இருளை அகற்றி மோட்சபாதையிலே நடத்துவார்.

ஙூ. இயேசுக்கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்று உங்களை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். கிறிஸ்துநாதர் ஒருவரே உங்கள் இரட்சகர் அவராலன்றி வேறொருவராலும் உங்களுக்கு இரட்சிப்பில்லை. அவர் தமது இரத்தத்தினாற் கொண்ட அடிமைகள் நீங்கள். ஆகையால் தண்ணீரிலே விழுந்து அமிழ்ந்துகிற ஒருவனுக்கு ஒரு பற்றுக்கோடு கிடைத்தால் எவ்வளவு ஆவலோடே அதைத் தாவிப்பிடித்துக்கொள்வானோ அவ்வளவு ஆவலோடு நீங்களும் அவரையே பற்றிப் பிடித்துக்கொண்டு உங்கள் சரீரத்தையும் ஆத்துமாவையும் அவருக்கு ஒப்புக்கொடுங்கள்.

ச. கிறிஸ்துநாதரை நம்பி ஞானஸ்நானம் பெற்று அவருடைய சபையிலே சேர்ந்து அவருடைய திருவிருந்தை அநுபவித்து அவருக்குத் தொண்டராய் நடவுங்கள். நீங்கள் இருதயத்திலே மாத்திரம் விசுவாசிகளாயிருந்தாற் போதாது. உங்களை எல்லாரும் விசுவாசிகளென்று காணும்படி அவருடைய நாமத்தை வாயினாலு

ம் பிரஸ்தாபப்படுத்துவீர்களாக. கிறிஸ்துவைப்
பின்பற்ற வெட்கப்பட்டு அவரை மதியாமற்த
ள்ளிப்போட்டவர்களை அவரும் நியாயத்தீர்ப்பு
நாளிலே புறக்கணித்துத் தள்ளிப்போடுவார்.
தம்மைப் பின்சென்று அவர்நிமித்தந் துன்பப்
படுகிறவர்களையோ சூரியனைப்போலே என்றெ
ன்றைக்கும் பிரகாசிக்க வைப்பார். முடிவிலே
இப்படிப்பட்ட ஒரு நியாயத் தீர்ப்பிருக்கையா
ல் அதிக சீக்கிரத்திலே மனந்திரும்புவீர்களாக.
எத்தனை நாளுக்கு இருநினைவாயிருப்பீர்கள்? இ
திலே தாமதித்திருந்தீர்களேயாகில் அவர் பொ
றுத்திருக்கும் இரக்கத்தின் காலம் போய்ப்
பொறுத்திராத நீதியின்காலஞ் சீக்கிரமாய் வரு
ம். அப்பொழுது நீங்கள் அவரைக் கூப்பிட்
டால் அவர் உங்களைப் பார்த்து நாம் அழைத்த
பொழுது நீங்கள் வரமாட்டோமென்றீர்கள் இ
ப்பொழுது நாம் உங்களுக்குக் கேள்வி கொடு
க்கமாட்டோம். நீதியின்படி நித்தியமும் வேத
னையிலே கிடந்து அழுந்துங்கள் என்பார். ஆ
கையால் உலககாரியங்களை வெறுத்துப் பரம
காரியங்களை விரும்பி உலக இரட்சகராகிய கிறி
ஸ்துநாதரைப் பற்றிக்கொண்டு அவர் வழியாய்
ப் பாவ நிவிர்த்தியைப் பெற்று மோட்ச சுகத்
தை அடையுங்கள்.

---

## உவமை வாக்கியங்கள்.

ஆகிலும் உங்களுக்கு எப்படித் தோன்றுகின்
றது. ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரருண்டு.
அவர்களில் மூத்தவனிடத்தில் அவன் வந்து ம
கனே, இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்
திற் போய் வேலைசெய் என்றான்.

அதற்கவன் போகமாட்டேனென்றான். பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான்.

தகப்பன் இளையவனிடத்திலும் வந்து அப்படித்தானே சொன்னான். அதற்கவன் ஐயா, உடனே போகிறேனென்று சொல்லியும் போகவில்லை.

இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தானென்று அவர் கேட்டபொழுது, மூத்தவனே செய்தானென்றார்கள். அப்பொழுது இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்னதாவது, ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே பராபரனுடைய இராச்சியத்திலே பிரவேசிக்கிறார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

எப்படி என்றால் யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்தும் நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை. ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள். அதை நீங்கள் கண்டும் பின்பு அவனை விசுவாசிக்கும்படிக்கு மனஸ்தாபப் படாமலிருக்கிறீர்கள்.

வேறு உவமையைக் கேளுங்கள். ஒரு வீட்டெசமானுண்டு. அவன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி அதைச் சுற்றி வேலி அடைத்து அதில் ஆலையைநாட்டிக் கோபுரத்தையுங் கட்டிப் பின்பு அதைத் தோட்டக்காரர் வசமாய் விட்டுப் பிறதேசத்துக்குப் போனான்.

கனிகாலஞ் சமீபமானபொழுது கனிகளை வாங்கிக்கொண்டு வரும்படிக்குத் தன் ஊழியக்காரரைத் தோட்டக்காரரிடத்தில் அனுப்பினான். தோட்டக்காரரோ அவன் ஊழியக்காரரைப்

பிடித்து ஒருவனை அடித்து ஒருவனைவெட்டி மற்றொருவன் மேற் கல்லெறிந்து கொன்றார்கள்.

மறுபடியும் எசமான் முந்தினவர்களிலும் அதிகமான வேறு ஊழியக்காரரை அனுப்பினான்.

அவர்களையும் அப்படியே செய்தார்கள்.

கடைசியிலே அவன் என்னுடைய குமாரனுக்கு அஞ்சுவார்களென்றெண்ணித் தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான்.

தோட்டக்காரரோ குமாரனைக் கண்டபொழுது இவன் சுதந்தரவாளி. இவனைக் கொன்று இவனுடைய சுதந்தரத்தைக் கட்டிக்கொள்வோம் வாருங்களென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டு,

அவனைப் பிடித்துத் திராட்சத் தோட்டத்திற்குப் புறம்பே தள்ளிக் கொலைசெய்தார்கள்.

ஆகையால் திராட்சத் தோட்டத்திற்கு எசமான் வரும்பொழுது அந்தத் தோட்டக்காரரை என்ன செய்வான்! என்று கேட்டார்.

அதற்கு அவர்கள் சொன்னது, அவன் அந்தப் பொல்லாதவர்களைக் கடினமாய் அடித்துத் தகுதியான காலங்களிலே தனக்குக் கனிகளைக் கொடுக்கும் வேறே தோட்டக்காரர் வசமாய்த் திராட்சத் தோட்டத்தை விடுவான் என்றார்கள்.

முற்றிற்று.